අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
**OFFICE ON MISSING PERSONS**

**ஊடக வெளியீடு** **28 பிப்ரவரி 2019**

## ஓராண்டு நிறைவு: காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) தாம் நிறுவப்பட்ட ஓராண்டு நிறைவினை 2019 பங்குனி மாதம் தொடர் நிகழ்வுகளை நடத்தவுள்ளது. 2016ம் ஆண்டின் 14ம் இலக்க சட்டம் கா.போ.அ. (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) படி உருவாக்கப்பட் இது 2018ம் ஆண்டு மாசி 28ம் திகதி தனது உறுப்பினர் நியமனத்தோடு செயற்படத் தொடங்கியது.

காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான ஆட்களைத் தேடிக் கண்டுபிடிப்பதே கா.போ.ஆ. அலுவலகத்தின் பிரதான பணிப்பாணையாகும். இவ்வாறு அது கடந்த ஓராண்டுக்காலத்தில் தன் அலுவலகத்தை செயற்படுத்த அமைப்பின் கட்டமைப்பையும் முன்னெடுப்பையும் திட்டமிடுதல், நெறிமுறைகளை அபிவிருத்தி செய்தல், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கான வெளிக்கள நிகழ்ச்சிகளுடன் மேலதிகமாக விசாரணைகளை ஆரம்பித்தல், குறிப்பிட்ட சில வழக்குகளில் இடைப்படல், காணாமல் ஆக்கப்படுதல் சம்பந்தமான புரிந்துணர்வு ஏற்படுத்தலுக்கான தொடர்பாடல், என்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் பிரச்சாரம், சட்ட மற்றும் கொள்கை சீர்திருத்தத்திற்கான பரிந்துரை முதலியவற்றையும் மேற்கொண்டது. 2018 ஆவணி மாதம் குடும்பங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய இடைக்கால நிவாரணத்தை கா.போ.அ. முன்மொழிந்ததோடு நீதியையும் உண்மையையும் அறிய தன் தேடலின் பரிந்துரைகள் அடங்கிய தனது இடைக்கால அறிக்கையை வெளியிட்டது. தனது பரிந்துரைகளை விரைவில் அமுலாக்குவதை உறுதிப்படுத்தும்படி கா.போ.அ. அரசாங்கத்தை வேண்டுகின்றது.

காணாமல் போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்பங்கள் தம்மை அணுகுவதை சுலபமாக்குவதற்கான தன் அர்ப்பணிப்பாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் பிராந்திய அலுவலகங்களை திறக்க கா.போ.அ. திட்டமிட்டுள்ளது. தனது முதலாம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு கா.போ.அ. பங்குனி மாதத்தில் மன்னார், மாத்தறை ஆகிய இரு இடங்களில் நிறுவுகின்றது. மன்னார் பிராந்திய அலுவலகமானது இல. 5, புகையிரத வீதி, மன்னாரிலும், மாத்தறை பிராந்திய அலுவலகம், இல. 54 தர்மாராம வீதி, கோட்டை, மாத்தறையிலும் தாபிக்கவுள்ளது.

காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் ஒரு முக்கிய அம்சமாக அகழ்வாய்வும் மனித எச்சங்களை அடையாளம் காண்பதுமாயிருப்பதால் கா.போ.அ. அதனை அரச முகவர் நிறுவனங்கள், குடும்பங்கள் மற்றும் இதரர்களிடமிருந்தும் உதவி பெற்றுச் செய்ய விழைகின்றது. தேவைப்படும் முன்னெடுப்புக்கள் சம்பந்தமாக மேலதிகமான பொதுசன விழிப்புணர்வுக்காக, “அறிவியல் ரீதியாக உண்மையைத் தேடலில் மானுடத்தை மதித்தல்” என்ற தலைப்பில் ஒரு பேருரையாற்ற உலகப் புகழ்பெற்ற ஆர்ஜென்டினா தடயவியல் அறிஞர் கலாநிதி லூயி பொன்டபிரிடர அவர்கள் கா.போ.அ. யால் அழைக்கப்பட்டுள்ளார். இவர் தற்போது ஆர்ஜென்டின் தடயவியல் மானுடவியல் குழு உறுப்பினராவார். இவ்வுரையானது 2019ம் ஆண்டு பங்குனி 9ம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) ஆற்றப்படும்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் கதியை தெளிவுபடுத்துவது ஒரு சிக்கலான காரியம் என்பதை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் இனங்காணுகின்றது. கணிசமான சவால்களுக்கும் தாமதங்களுக்கும் மத்தியில் தனது பணிப்பாணையை தொடர்ந்தும் சிரமேற்கொண்டு பலியாக்கப்பட்டவர்களதும் அவர்கள்தம் குடும்பத்தினரதும் உரிமைகள் இன்னமும் உறுதியாக பாதுகாக்கப்பட கா.போ.அ. தொடர்ந்தும் பணியாற்றும்.